கடவுள் துணை.

# தமிழகம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து மாதாந்தரத்
தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."—திருக்குறள்.

அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

டாக்டர் உ. வே. [illegible]
நூல் நிலையம்,
சென்னை-600090.

முதற்றொகுதி.

பத்திராசிரியர்—T. இராஜமையங்கார், B. A. L. T.

தஞ்சை:

கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

1905.

Copyright] [Registered

# முதற்றொகுதியின் உள்ளுறை.

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY, TIRUVANMIYUR :: MADRAS-41


| ந. | வியாஸம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| 1 | அச்சுத்ராயாப்பியுதயம் | ஸ்ரீமத் T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் | 201, 253, 294. |
| 2 | அணங்குகொலென்னுங் குறள்கைக் கிளைத்திணையே | வித்வான் அ. சண்முகம்பிள்ளை | 137, 166, 185,212, 235. |
| 3 | ஆயுள் விருத்தி நூல் | ஸ்ரீமத் S. குமாரசாமிமேற்கொண்டார் | 81, 101, 151,195, 217. |
| 4 | ஆரியர்களின் ஸங்கீத முறை | ,, P. S. ஸுந்தரம் அய்யர், B. A., L. T. | 25,56,107, 156,198, 221. |
| 5 | இந்துமதமும் தற்காலத்து சாஸ்திரங்களும் | பத்திராசிரியர் | 73. |
| 6 | 'எனெயிட்' என்னும் காப்பியம் | ஸ்ரீமத் A. சிவக்கொழுந்து முதலியார், B. A. | 20,47, 67, 119,188. |
| 7 | ஒற்றுமை | ,, திரு. சோமசுந்தரம்பிள்ளை | 193. |
| 8 | கம்பநாடகம் | ,, P. R. கிருஷ்ணமாசாரியர் | 208. |
| 9 | கீர்த்திபெற்ற தமிழ் வைத்தியார் ஒந்த்தாச்சியாபிள்ளை குடும்பம் | ,, உ. அப்பாசாமி ஐயர் | 177. |
| 10 | கைத்தொழில் | ,, D. சாலமன் | 159,169. |
| 11 | கோவிலின் வெளிப்பிராகாரம் | பத்திராசிரியர் | 112. |
| 12 | சங்கீதமும் அதன் பயனும் | ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை | 174. |
| 13 | சரீரதத்துவவிளக்கம் | ,, T. K. கோபாலராவ் | 30,49,145 |
| 14 | சாக் அல்லது சீமைச்சுண்ணும்பு | ,, T. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 47,60... |
| 15 | சாஸ்திரவிசாரணை | ,, S. ஸ்ரீரங்காசாரியார் | 97. |
| 16 | சிற்றம்பலநாட்டான் | ,, உ. அப்பாசாமி ஐயர் | 90. |
| 17 | தமிழ்ச்சங்கங்களின் இன்றியமையாமை | பண்டிதர். R. சுப்பிரமணிய ஐயர் | 4. |
| 18 | தமிழ்நூல்களும் நூலாசிரியர்களும்:— | | |
| | 1. வீரசோழியத்தின் காலவரையறை | ஸ்ரீமத் உ. அப்பாசாமி ஐயர் | 44. |

| ந. | வியாஸம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| 2. | சூடாமணிநிகண்டின் காலவரையறை | ஸ்ரீமத் T. S. குப்புஸ்வாமிசாஸ்திரிகள் | 69. |
| 3. | நச்சினார்க்கினியார் காலம் | ,, T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் | 91. |
| 4. | பிரயோகவிவேகத்தின் காலவரையறை | ,, T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் | 115. |
| 5. | ஜீவகசிந்தாமணியின் காலவரையறை | ,, T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள் | 130. |
| 6. | நம்மாழ்வார்காலம் | பத்திராசிரியர் | 180. |
| 7. | மாணிக்கவாசகர்காலம் | பத்திராசிரியர் | 283. |
| 19 | தேவதத்தன் சரிதம் | ஸ்ரீமத் உ. அப்பாசாமி ஐயர் | 259, 280. |
| 20 | நன்மையும் தீமையும் | பண்டிதர் S. சுப்பிரமணிய சாஸ்திரிகள் | 262. |
| 21 | நிலவழுக்குகளென்பவை யாவை? | ஸ்ரீமத் L. அனந்தையர் | 53. |
| 22 | பதிற்றுப்பத்து உரை | பண்டிதர் K. M. நடேச ஐயர் | 47,65, 95, 191,210. |
| 23 | பதினெண்பதாம் நூற்றாண்டில் தமிழின் நிலைமை | ஸ்ரீமத நச்சினார்கினியார் | 245. |
| 24 | பத்திராதிபர் குறிப்பு | பத்திராசிரியர் | 1. |
| 25 | பூகம்பமும் எரிமலையும் | ஸ்ரீமத் K. இராமாநுஜ ஐயங்கார் | 16,33,63, 88,109, 124,206, 225,275. |
| 26 | மகாதேவ கோவிந்த ரநதேவ் | பத்திராசிரியர் | 121. |
| 27 | முயற்சி | சௌ. மரகதவல்லி அம்மாள் | 241. |
| 28 | ல்ரென்ஸோடி மெடீச்சி | ஸ்ரீமத் உ. அப்பாசாமி ஐயர் | 39,89. |
| 29 | வாரங்களும் அவைகளின் பெயரும் | ,, P. S. ஸுந்தரம் அய்யர் B. A., L. T. | 273. |
| 30 | விண்ணன் சரித்திரம் | பண்டிதர் அ. நாராயணசாமி ஐயர் | 229. |
| 31 | விஷ்ணுவர்த்தனன் | ஸ்ரீமத் S. N. ஸ்ரீநிவாஸன் | 141, 164, 250. |



## முதற்றெகுதியில் வெளிவந்த நூல்கள்.

முடிந்தவை.

i. சுவாமிநாத விஜயம். ... } ஸ்ரீமத் P. R. கிருஷ்ணமாசார்யர் சஞ்சிகை 6.

ii. தஞ்சைத் தமிழ்ச்சங்கத்து நான்காம் வருஷ அறிக்கைப் பத்திரம். } பத்திராசிரியர்—சஞ்சிகை 10

முடிவுபெறவேண்டியவை.

i. விசுவநாதம். ... } பண்டிதர் C.S. முத்துஸாமி ஐயர் சஞ்சிகைகள் 1,2,3,4,5,6,7,8,9,12

உ

சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம். 1 | 1905-௵ ஜனவரி௴ | நம்பர். 1.

## பத்திராதிபர் குறிப்பு.

இப்பத்திரிகைக்குத் "தமிழகம்" என்று பெயரிட்டோம். அதற்குக் காரணம் தமிழ் பேசப்படும் நாட்டில் எங்களுக்குள்ள அபிமானமே. அபிமானமற்றவர் தமது நாட்டுக்கு ஓர் உபகாரமான காரியத்தைச் செய்தார்களென்று நாம் கேள்வியுற்றதில்லை. ஆனால் நீங்கள் மிகவும் அபிமானமுள்ளவர்களோ என்று சிலர் கேட்கலாம். இயற்கையாகவே அபிமானம் எங்கள் உடலோடு பிறந்ததில்லையானாலும், 'எம் நாடு, எம்நாடு' என்று கூறிக்கொண்டேயாகிலும் செயற்கை அபிமானம் பெறலாமென்று நாங்கள் நினைக்கிறோம். நல்லது, ஓர் பத்திரிகைக்கு நாட்டின் பெயரை இடலாமோ என்றால், அதற்குப் பதிலாக எடுத்துக் காட்ட எங்களுக்கு உதாரணமிருக்கின்றது. ஆங்கிலபாஷையில் "இந்தியா" என்று ஒரு பத்திரிகை வெளியிடப்பட்டு வருகிறது. அது இந்தியாவின் அபிமானசீலர்களாகிய சில பெரியோர்களால் எழுதப்பெற்று வழங்கி வருகிறது. அப்பத்திரிகை இராஜாங்க விவகாரங்களைப் பற்றிக் கூறும் பத்திரிகையாக இருந்தபோதிலும், நாம் அதை எடுத்துக்கூறியது பெயருக்கு உதாரணமாக மாத்திரமே! அப்பத்திரிகையைப்போல நாங்கள் இராஜாங்க விஷயங்களைப்பற்றிப் பேசப் போகிறதில்லை. ஆங்கிலேய ஐரோப்பிய சாஸ்திர சம்பந்தமான விஷயங்களையும் தமிழ் சம்பந்தமான விஷயங்க

ளையும் மாத்திரமே எளிய தமிழ்நடையில் எழுதுவது என்று ஆரம்பித்திருக்கின்றோம். தமிழகம் என்ற பத்திரிகையில் ஐரோப்பிய சாஸ்திரவிஷயங்களை ஏன் கூறுகிறீர்கள் என்று கேட்டால், மேற்படி விஷயங்களை நமது தமிழர்கள் கால தேச வர்த்தமானங்களுக்கேற்பச் செம்மையாகப்படித்து மனனஞ்செய்து அவைகளையும் அப்பியாசத்துக்குக் கொண்டு வந்தாலொழிய, அவர்கள் முன்னுக்கு வரமாட்டார்களென்பது எங்கள் தீர்மானம். ஆதலால் நாங்கள் ஐரோப்பிய சாஸ்திர விஷயங்களுக்கு பிராதான்யத்தைக் கொடுத்து இப்பத்திரிகையை வெளியிடலானோம்.

நல்லது, 'தமிழகம்' என்னும் பெயரை யார் வழங்குகிறார்கள்? இப்பெயர் புதிதாய் இருக்கிறதே என்று கேட்கலாம். இப்பெயர் குறிக்கும் நாடு, தமிழ் வழங்கிவரும் நமது நாடே! கொஞ்சகாலமாக இப்பெயர் வழங்காமற்போய்விட்டது. இந்நாட்டின் எல்லைகள் வடக்கே திருவேங்கடமலையும், கிழக்கே சமுத்திரமும், தெற்கே குமரிமுனையும், மேற்கே சமுத்திரமும், என்பர். சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன் இந்நாட்டிற்குத் தமிழகம் என்றே பெயர் வழங்கி வந்தது. உதாரணமாக, பதிற்றுப் பத்தில் 'குமட்டூர்க் கண்ணனார்' என்னும் புலவர், 'இமையவரம்பனெடுஞ் சேரலாதன்' என்னும் சேரனைப் புகழ்ந்துபாடும் பொழுது,

"இமிழ்கடல்வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇ,"

என்று கூறியிருக்கிறார். கிரேக்கர்களும் இப்பெயரை 'டெமரிக்கே' என்று திரித்து தமது நூல்களில் ஒன்றான 'பெரிப்ளஸ்' என்றநூலில் வழங்கினார்கள் என்றும் தெரிகிறது. ஆதலால் சிறிதுகாலம் இப்பெயர் அறியாமையால் வழங்கி வாராததைக்கொண்டு, அப்பெயரையே விட்டுவிடுதல் தகுதியன்று. 'தமிழகம்' என்ற பெயரோ கேட்போருக்கு இனிமையுள்ளதாகவும், தமிழர்களுக்கு மிகவும் சுதேசாபிமானத்தைப் பிறப்பிக்கும் பெயராகவும் இருக்கிறது. ஆதலால் இப்பெய

ரே இப்பத்திரிகைக்குப் பெயராக இடப்பட்டது. இப்பத்திரிகை இன்றியமையாத தற்காலத்து நாகரீக மனோபாவங்களுக்கும், ஆங்கிலசாஸ்திர விஷயங்களுக்கும் இனிய வீடாகுக?

இப்பத்திரிகையைச் சீக்கிரம் வெளியிடும்படி அருள்புரிந்த நமது சங்கத்தலைவரும் பாப்பாநாட்டு ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் R. சுவாமிநாத விஜயதேவர் அவர்களது தமிழபிமானமும் பேருதவியும் மறக்கற்பாலதன்று. இவர் செய்யும் உதவிக்குத் தஞ்சை ஜில்லா வாசிகளான எல்லாத் தமிழர்களும் மிகவும் அன்புபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவருக்கு நீண்ட ஆயுளையுந் தேக ஆரோக்கியத்தையுந் தரும்படி ஈசனைப்பலமுறையும் வேண்டுகிறோம்.

எத்துணை வேலைகள் தமக்கிருப்பினும், சங்கத்தலைவருக்குப் பிரதிநிதியாக இருந்து, இப்பத்திரிகையை வெளியிடுவதும் பொதுநன்மையெனக் கருதி மிகுந்த ஊக்கத்தோடு உழைத்து வரும் மகா-ா-ா-ஸ்ரீ T. D. சுவாமிநாதய்யர் அவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்மைபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறோம்.

வசன நடை பெருகினலொழிய தமிழ் அபிவிருத்திக்கு வராது என்று நினைக்கிற தமிழ் நண்பர்கள் எல்லாரும் தம்மாலியன்ற அளவு பொருளுதவியும் விஷயதானமுஞ்செய்வார்களென்று நம்பி, கடவுள் அருளை முன்னிட்டுக் கொண்டு, இப்பத்திரிகையை வெளியிடலானோம்.

சுபமஸ்து.

# தமிழ்ச்சங்கங்களின் இன்றியமையாமை.

இவ்விஷயம், தமிழர்களுக்கேயன்றி உற்றநோக்குமிடத்துப் பிறருக்கும் பயன்படும்படியாகவே எழுதப்பட்டிருக்கின்றது.

---

உலகின்கண் மக்களாய்ப் பிறந்திருக்கும் ஒவ்வொருவரும், தமது நன்மையின் பொருட்டும், தமது பரம்பரையில் வருபவர்களது நன்மையின் பொருட்டும் உழைக்கவேண்டியவர்களாகவே யிருக்கின்றார்கள். நன்மையாவது யாதென்னின்,—யாவரானும் விரும்பப்படுவது இன்பம். அவ்வின்பத்துக்குக் காரணம் பொருள். ஒருவருக்குரிய பொருளின்பங்களின் எல்லைக்குள் பிறர் புகாமையே அறம். ஆதலின்; இவ்வாறு தம்மில் இயைபுடையனவாகிய அறம் பொருளின்பங்களே நன்மை யென்னப்பட்டது. அந்நன்மையைப் பெறுதற்பொருட்டுத்தாம் மேற்கொள்ளும் ஒரு சிறிய உழைப்பேயாயினும் பலருடைய ஒற்றுமையின்றி நடவாதென்பதையும், மிகப்பெரிய உழைப்புக்களேயாயினும் பலருடைய ஒற்றுமையினால் எளிதின் முடிக்கப்படும் என்பதையும், அறியாதார் யார்? ஒற்றுமைப் படுவோரது தொகை மிகமிக, அவர்கள் உழைப்பின் பயனும் மிகுந்து தழைப்பதாயிரா நின்றது. அங்ஙனமாயினும், உலகம் முழுவதும் ஒற்றுமைப்பட்டு நடத்தல் ஏந்நாளும் அருமையுடைமையின், உலகின் ஒவ்வொரு பகுதியிலுள்ளோரே தம்மில் ஒற்றுமைப்பட்டு நடத்தல் கூடும். அவ்வாறு ஒற்றுமைப்பட்டு நடந்த கூட்டங்களே, உலகம் முழுவதும் நிரம்பி, இப்பொழுதுங் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒவ்வொரு கூட்டத்தாரும், தமது இன்பவாழ்க்கைக்கு ஒரே காரணமாக உள்ள அவ்வொற்றுமையைக் காப்பாற்றிக் கொ

ள்ளுதற்பொருட்டுக் கைக்கொண்ட இன்றியமையாத கருவி ஒன்று உண்டு. அதுதான் அவரவர் பேசும் பாஷை.

ஒரு தாய், தன் பிள்ளைகளுக்கு, 'நீவிர் இயற்கை யன்பின ராய் ஒற்றுமைப்பட்டு வாழ்தற்குரிய சகோதரர்களாவீர்' என்று தன் இருப்பினாலேயே அறிவியாநிற்பாள். அது போல, ஒரு கூட்டத்தில், அறிவாலும் பொருளாலும் சிறந்தோராயுள்ளவர் கள், அவைகளில்லாத ஏழைகளைத், தமது கூட்டத்தாரல்லாத பிறர் போல் நோக்கி, அவர்களையுங் கெடுத்து, அவ்வாறு தமது கூட்டத்தைச்சிதைத்தலால் நாளடைவில் தாமுங்கெட்டு, இவ் வாறு, கடைசியாக ஒரு கூட்டமே முழுகிப்போகாதபடி, அக் கூட்டத்தாருக்கு, 'நீவிர்யாவரும், இயற்கையன்பினராய் ஒற் றுமைப்பட்டு நீடூழிவாழ்தற்கு உரிய, ஒரே கூட்டத்தினராவீர்' என்று தன் இருப்பினாலேயே அறிவிக்கும் ஒரே தாய், அக் கூட்டத்தாரால் பேசப்படும் ஒரே பாஷையேயன்றோ?

இனி, தமது நன்மையின் பொருட்டு உழைக்கும் ஒருவர், பிறரோடு ஒற்றுமைப்பட்டு வாழவிரும்புவது எதற்காக? தமது நன்மை மேன்மேற் செழித்தற்காகவேயாதலின், ஒரு கூட்டத் தில்; யாவருக்கும் நன்மை செழித்தற்கு வேண்டிய பொது உழைப்புக்கள் மிகுமாயின், அக்கூட்டத்தாரின் ஒற்றுமையும் உறுதிப்படுதலும், அப்படிப்பட்ட உழைப்புக்கள் குறையுமா யின், அவ்வொற்றுமையும் தளர்ச்சியடைதலும், இயற்கையே யன்றோ? ஆகவே, ஒற்றுமையின் பயனை உள்ளபடி உணர்ந் தோராயும், அறிவாலும் பொருளாலும் ஆற்றல் படைத்தோ ராயும் இருக்கிற ஒவ்வொருவரும், தமது நன்மைக்காக உழை ப்பதுபோலவே, தமது கூட்டத்தைச்சேர்ந்த பிறரது நன்மை யின்பொருட்டும் உழைக்கவேண்டியவர்களேயாகிறார்கள். உண் மையால் நோக்குமிடத்து, தமது கூட்டத்தைச்சேர்ந்த பிற ரது நன்மையின்பொருட்டு உழைக்கின்றவர்களெல்லாரும், தம க்கு மேன்மேற்கிடைக்கின்ற நன்மைகட்கெல்லாம் காவலாகிய எவ்வளவோ கோட்டைகளை தம்மைச்சுற்றிலும் கட்டிக்கொள் ளுகின்றவர்களேயாகிறார்கள். என்னை? 'ஒருமரந்தோப்பாமா?

ஒரு பிள்ளை பிள்ளையாமா?' என்பது பழமொழியன்றோ? தனித்து நிற்கும் ஒரு மரம், தோப்பின்கண் நிற்கும் ஒரு மரத்தைப்போன்று, நிலையான நன்மைகளைப்பெறாது. தனித்துப் பிறந்திருக்கும் ஒரு பிள்ளையும் இயற்கையன்பு பாராட்டுதற்கு உரிய உடன்பிறப்புக்களையுடைய ஒரு பிள்ளையைப்போன்று, நிலையான நன்மைகளைப் பெறான். அதுபோலவே, 'பிறர் எக்கேடு கெட்டாலென்ன' என்று கருதி, இயற்கையன்பு பாராட்டுதற்குரிய ஒரு கூட்டத்தினின்றும் தம்மைப் பிரித்துக்கொள்ளுகின்றவர்களும், தமது கூட்டம் முழுவதும் நன்மை பெறுதற்காக உழைப்பவர்களைப்போன்று, நிலையான நன்மைகளைப் பெறார். அங்ஙனமாயின், யாவரும் நன்மை பெறுதற்கு வேண்டிய உழைப்புத்தான் யாதென்னின்—நன்மையாவது, அறம் பொருளின்பங்களேயாதலானும்; அவ்வறம்பொருளின்பங்கள், அவைகளுள் ஒன்றாகிய பொருளாலேயே அடையப்படுதலானும்; அப்பொருள்தான், அவரவர் உழைப்புக்களின் அருமைக்குத் தக்கபடி கிடைத்தலானும்; அவ்வருமையான உழைப்புக்களோ, அவரவர் இயற்கையறிவுக்குத் தக்கபடி தெரிந்துகொள்ளப்படுதலானும்; அவ்வியற்கையறிவோ, பிறருடைய கொள்கைகளை அறிய அறிய, அவ்வளவுக்கவ்வளவு ஊறிப் பயன்படுதலானும்; அப்பிறருடைய கொள்கைகள், பாஷையாகிய கருவியினாலேயே அறியப்படுதலானும்; ஒரு கூட்டம் முழுவதும் அறிந்து நன்மை பெறவேண்டின், அப்பிறருடைய கொள்கைகளெல்லாம், அக்கூட்டத்தார் யாவருக்கும் எளிதாகிய சுய பாஷையின்கண்ணே அமைக்கப்படவேண்டுமாதலானும்; அப்படிப்பட்ட சுய பாஷையை வளர்த்தலே, தமது கூட்டம் முழுவதும் நன்மைபெறுதற்குக் காரணமான உழைப்பாம் என்பது.

அஃதேல்; சுய பாஷையை வளர்த்தலாவது யாது? என்னின்:—பாஷைதான் தொன்றுதொட்டு வழங்குவதொன்றாகலின், அப்பாஷையின்கண் உள்ள இலக்கியங்களையும் இலக்கணங்களையும், இக்காலத்து உலக வழக்கையும் ஆராய்ந்து,

அவற்றின் உண்மை வடிவையும் உண்மைப்பொருளையும் கண்டறிந்து, யாவருக்கும் பயன்படச்செய்தல் ஒன்று. இப்படிச் செய்வதனல், முன்னோர் வளர்த்துவைத்த அப்பாஷையில், நாம் தெரிந்துகொண்ட அவ்வளவையாவது, இனிமேற் றளராதபடி காப்பாற்றிவைத்தவர்களாவோம். ஆயினும், அம்மட்டோடே நின்றுவிடாது செய்யவேண்டியது மற்றொன்றுண்டு. பாஷையினலாகிய பயனெல்லாம் யாது? அறம்பொருளின்ப வீடுகளையடைதற்பொருட்டு பிறர் தெரிந்துகொண்டிருந்த பலவகைப்பட்ட நெறிகளையெல்லாம், தன்னை அறிந்தவர்களுக்குக் கற்பித்து, 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தற்குக் கற்றனைத்தூறுமறிவு' என்றபடி அவரது இயற்கையறிவை வளர்த்து, 'அறிவுடையா ரெல்லாமுடையார் அறிவிலார் என்னுடையரேனுமிலர்' என்றபடி, அவரை எல்லா நன்மைகளையும் பெறுதற்குரியவராக்குதலேயன்றோ? ஆதலின், ஒரு பாஷை தன்னை வழங்கும் கூட்டத்தாரை முன்னுக்குக் கொண்டுவருவது, தனது பழமையாலுமன்று, தனது அழகினாலுமன்று, தன்னலறிவிக்கப்படும் விஷயங்களினாலேயேயாம். ஆதலால்; தம் சுய பாஷையின்கண் அமைந்து கிடக்கும் விஷயங்களோடு, பிற பாஷைகளிலே அமைந்து கிடப்பனவாகிய அவரவர் கொள்கைகளையெல்லாம் மொழிபெயர்த்து அமைத்து இவ்வாற்றன், உலகின்கண் இதுகாறும் அறியப்பட்டுள்ள எல்லா விஷயங்களையும், தமது சுய பாஷையாகிய ஒரே கருவியாற் காணும்படி ஆக்கி, யாவருக்கும் பயன்படச் செய்தலாகிய இதுவே காலநிலைக்கு ஏற்ப அறிவை வளர்க்கும் வழியாம். ஆகவே, முன்னோரால் வளர்க்கப்பட்டதனைக் காப்பாற்றுதலும், காலநிலைக்கு ஏற்பப் பின்னும் வளர்த்தலும், ஆகிய இவ்விரண்டு வழிகளானும் சுய பாஷையை வளர்த்தல் வேண்டுமென்பது.

இங்ஙனம் பொதுநன்மைக்காகப் பாடுபட்டுச் சுய பாஷையை வளர்ப்பவே, தமது கூட்டம் முழுவதும் அறிவு செழித்துப் பொருளும் தழைக்கும்; தழைப்பவே, ஒற்றுமை உறுதிப்

படும். ஒற்றுமை உறுதிப்பட்டதாயின், அவர்தாம் எல்லா நன்மைகளையும் எளிதின் எய்தி, நீடூழி நிலைத்த இன்ப வாழ் வினையுடையராவர். இதனையன்றே, முதற்கண், 'ஒவ்வொரு கூட்டத்தாரும் தமது ஒற்றுமையைக் காப்பாற்றிக்கொள்ளு தற்பொருட்டுக் கைக்கொண்ட கருவி, அவரவர் பேசும் பாஷை' என்றும். 'ஒற்றுமைக்குக் காரணமும் நன்மையே, ஒற்றுமையின் காரியமும் நன்மையே,' என்னும் உண்மையை அறிந்துகொண்டவர்களே, உண்மையான மனிதர்கள்.

இவ்வுண்மையை அறிந்த பிற கூட்டத்தார்களால் வளர்க் கப்பட்ட அவர்கள் பாஷையாகிய பூங்கொடிகள், அவர் கூட்டமெல்லாம் படர்ந்து, மலர்ந்து, அவ்வுண்மையை அறி யாது ஏமாறியிருக்கின்ற பிற கூட்டங்களிலும் தமது மணத் தை வீசி, 'எமக்கு உரிய கூட்டத்தார் எம்மை வளர்த்தனர். அவர்களுக்கு உரிய யாங்களும் அவர்களை வளர்த்தோம்.' என்று காட்சியளவையாக அறிவிப்பவும், விழித்துக்கொள் ளாது, தமது சுய பாஷையை மறந்து தூங்குகின்றவர்களுக்கு, யான் அறிவிப்பது என்னவிருக்கின்றது?

இனி, நம் தமிழ்மொழி, தொன்றுதொட்டு வழங்குவதா யும், அழகிற்கே ஆலயமாயும், அறம் பொருள் இன்பம் வீடென்னும் பொருள்களால் நிரம்பியதாயும், செழித்து நிற் பதை அறியாதார் யார்? அப்படிப்பட்ட நம் தமிழ்மொழியை நம்மவர் மனதோடு கைவிடுவார்களோ, மாட்டார்கள். அவ் வாறாயின், ஏன் இப்படியாயிற்றென்னின்,—பிற கூட்டங்க ளில், பொருளீட்டுதற்குரிய நூதன முறைகள் காலநிலைக்கு ஏற்பத் தலையெடுத்தன. எடுக்கவே, நமது கூட்டத்திலிருந்த பொருளீட்டுதற்கு உரிய பழைய முறைகளெல்லாம், பயன் படாமல், நாளடைவில் அழிந்துபோயின. போகவே, பொருள் வருவாய் குறைந்தது. குறையவே, பிறநாடுகளிலிருந்து நமது நாட்டுக்கு வருகின்ற வரும்படிகளும் போய், நமது நாட்டுப் பொருள்களையும் பிறநாடுகளில் செலவு செய்யும்படி நேரிட் டது. நேரிடவே, இருந்த முதற்பொருள்களும் நாளடைவில்

குறையத் தலைப்பட்டு, வறுமை மிகுந்தது. மிகவே, வயிற்றை வளர்ப்பதே பெரும் பாடாய் முடிந்தது. முடியவே, வந்த கேடுகளை என்னவென்று சொல்லுவேன்?

> "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை,
> தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை,—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல், பத்தும்
> பசிவந்திடப் பறந்துபோம்." என்றபடி,

எல்லாம் உண்மையாகவே பறந்துபோய்விட்டன. அவைகளை யெல்லாம் பழைய நிலைமையிற் காணவேண்டின், நமது கூட்டத்தைச் செல்வத்தாற் செழிக்கச்செய்தாலன்றி, வேறு வழியேயில்லை. அங்ஙனம் பறந்து போய்விட்ட எல்லாவற்றையும் எடுத்து விரித்தற்கு இங்கே இடம் பெறாமையின், அவற்றுளொன்றாகிய கல்வியின் கதியைச் சிறிது கூறுகின்றேன்.

இவ்வாறு வறுமை மிகுதலாலே, யாதுசெய்வார்கள் பாவம்! ஏழைகளாயிருக்கும் பலரும் பொருளீட்டுவதற்கு வேண்டிய நூதன முறைகள் காணப்படாத ஒரே காரணத்தைக்கொண்டு தமது அருமை நிறைந்த தமிழைக் கைவிடும்படி நேரிட்டது. அதன்மேல், கற்ற அளவிற்குக் கைம்மேற் பொருளைக்காட்டும் கல்விகளைக் கற்கத் தலைப்பட்டனர். அக்கல்விகளையும் முடிவு போகக் கற்பதற்கு இயலாமல், வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய அவ்வளவே கற்பதும், உடனே பொருளீட்டுதற்கு இரவும் பகலும் உழைப்பதுமாய் முடிந்தது. முடியவே, 'கல்விக்குப் பயன், தமது கூட்டத்துக்கே நிலையான நன்மையைத் தேடி வைப்பது,' என்பதையும், 'உண்மையான கல்வி எதுவோ அந்த ஊரிலேயே இன்னும் நாம் அடியெடுத்தே வைக்கவில்லை' என்பதையும், முழுதும் அறியாதவர்களாய், 'கல்வியாவது—தற்காலம் வயிறு வளர்ப்பதற்கோர் வழி' என்றே தீர்மானித்து விட்டார்கள். அவர்கள்மேற் குற்றமென்ன? 'உண்மையான கல்வி இது,' என்று அறிதற்கும் கல்வி வேண்டாமோ?

இவ்வாறு, 'கல்விக்குப் பயன்—தற்காலத்துக்கு வேண்டிய பொருளீட்டலே' என்ற கொள்கை பலருக்கும் பாடமாய் விட்டதனால், செல்வர்களாயிருக்கும் சிலரும், சிறிதளவே

படித்து, ‘படிப்பின் பயனையே பெற்றிருக்கும் நமக்குப் படிப்பேன்? என்று எண்ணி, அவ்வளவோடே தமது படிப்பை நிறுத்திவிட்டு, இங்ஙனம் உண்மைப்படிப்பு இல்லாததனால், தமது செல்வத்தை மேன்மேல் வளர்க்கவும் காப்பாற்றவும் நியாயமான வழிகளிற் செலவழிக்கவும் அறியாதவர்களாய், நாளடைவில் ஏழைகளாகிறார்கள். இவ்வாறு, ஏழைகளும் செல்வர்களுமாகிய இருதிறத்தாரிடத்தும், உண்மைப்படிப்பென்பதே யில்லாமற்போய்விட்டது. படிப்பின் பயனெல்லாம் யாது? தான் கண்ட நன்மைபயக்குங் கொள்கைகளையெல்லாம் அவற்றையறியாத பிறருக்குப் புகட்டி, தன்னோடொத்த கொள்கையினராக்குதலே யாதலின், அவ்வாறு, கேட்டவுடனே மனதைப் பண்படுத்தித் தனக்கு உரியதாக்கிக் கொள்ளத்தக்க பிரசங்க சக்தி, நமது கூட்டத்து வளர்ந்து வாராமையே, உண்மைப் படிப்பின்மைக்கு ஓர் சாக்ஷியே யன்றோ? மத விஷயங்களிலும், பிற விஷயங்களிலும், பெருங் கூட்டங்களாகப் பலரையும் ஒற்றுமைப்படுத்தி வைத்தலெல்லாம் இப்பிரசங்க சக்தியேயன்றோ? இவ்வாறு உண்மைப் படிப்பில்லாமற்போய்விட்டதுமாத்திரமோ? நாளாக நாளாக, வயிற்றுப்பிழைப்புக்கு வேண்டிய அளவு படிப்பிற்கும் பொருள் மிக வேண்டியிருப்பதனாலே, ஏழைகளாயுள்ளவர்கள் அக்கல்வியைக் கற்பதற்குங்கூட இயலாமல், கடவுள் கொடுத்த இயற்கைவன்மையைக்கொண்டே இழிதொழில்செய்து பிழைப்பான் புகுந்தனர். சிறிது பொருளுள்ளவர்களோ, மானத்துக்கு அஞ்சி வீடுவாசல்களை விற்றுப் படித்தும், தற்காலம் வயிறு வளர்ப்பதே அருமையாய் முடிந்தது. இவ்வாறு, பெரும்பான்மையோர், சுய பாஷைப்படிப்பையும் கைவிட்டு பிற கல்விகளை முடிவுபோகக் கற்பதற்கும் கூடாமல், பொருளாலும் அறிவாலும் ஏழையாயினர். அதுமாத்திரமோ? இதனால் தம்மில் இருந்த ஒற்றுமையும் சிதைந்து, தீமையாய் முடிந்ததையும், சிறிது கூறுகின்றேன்.

நம்மவரிற் சிலர், சுய பாஷையை நன்கு கற்பதற்கு இடம் பெறுமையின், அறியாதவர்களாய்; ‘நம் தமிழ் பாஷையின்

கண் விஷயங்களே இல்லை,' என்று கூறி இகழவும் தலைப்பட்டனர். தமிழ்மாத்திரம் அறிந்தவர்களோடு கூடிப் பழகுதற்கும் நாணுவர். அவர்கள் எண்ணுகின்றபடி, பிற பாஷைகளிலுள்ள சிலவகை நூல்கள் தமிழின்கண் இல்லையென்பது உண்மையேயாயினும், அதற்குத் தமிழ்பாஷை என்னசெய்யும்? தமிழர்களாயும் படித்தவர்களாயும் உள்ள அவர்களன்றோ, அப்பொழுதே, அந்நூல்களை மொழிபெயர்த்தாவது, அந்நூல்களையெல்லாம் கற்றறிந்த தம் நுண்ணறிவைக்கொண்டு புதுநூல்கள் இயற்றியாவது, தம் தமிழை விஷயங்களால் நிரப்புதல்வேண்டும்? தம் தமிழிலுள்ள அருமையான விஷயங்களைப் பிறர், தம் சுய பாஷையில் மொழிபெயர்ப்பதைக் கண்டாவது, தெரிந்துகொள்ளவேண்டாமா? அப்படிச் செய்யாத குற்றம், தமிழர்களாகிய தம்மிடத்ததாகவும், பாஷையை இகழ்தற்குக் காரணம்யாதோ? விஷயங்கள் நிரம்பியதாகத் தாம் கருதியிருக்கும் பாஷைகளையே பேசும்படி தமிழ் பேசும் தமது கூட்டத்தையே மாற்றிவிடலாம், என்று எண்ணியிருந்தார் போலும்! அன்றியும், சிலர் காலநிலைக்கு ஏற்பச்சிறிது அறிவும் பொருளும் பெற்ற துணையானே, 'ஆலையில்லா ஊருக்கு இருப்பைப்பூச் சர்க்கரையாய்' இறுமாந்து, தன்னை மறந்து, தமது கூட்டத்தாரைக் காணின், தம்மைப்போல் நல்வாழ்வு பெறுதற்கே உரியவரல்லாத ஒருவகை மனிதர்களாக எண்ணி, இயற்கையன்பு பாராட்டாது விடுவதுமன்றி, வாய்த்த சமயங்களில் தமது ஆற்றலையும் அவர்களிடம் காண்பித்துவைப்பர். இவ்வாறு, நம்மவர்களே நம்மவர்களைக் கண்டு அருவருப்பாராயின், இதனினுங் கேடுகாலம் வேறு உண்டோ? இவ்வாறு தேசாபிமானம் சிதைந்து, ஏனென்று கேட்பாரின்மையால், நமது கூட்டத்து ஏழைகளுக்கு ஒரு கதியுமே இல்லாமற் போய்விட்டது. இவ்வளவிலும் தப்பி நின்ற சில குணவான்களாலேயே, நமது கூட்டம், இவ்வளவாவது நிலைத்திருக்கின்றது போலும்!

இவ்வாறு, நமது கூட்டம் பொருளாலும் அறிவாலும் ஏழையாகி, ஒற்றுமையும் சிதைந்து, தத்தளிக்கும் நிலைமையில், நம்மக்களுக்குத் தமிழைக் கற்பிப்பார் யார்? ஆகவே, சிறுபருவமுதற்கொண்டே தமிழைப் படிக்கின்றவர்கள் மிக அரியராயினர். அரியராகவே, பாடங்கேட்கு முறைகளும் நழுவத் தலைப்பட்டன. ஆகவே, நாளடைவில், நம் தமிழில் உள்ள அருமையான நூல்களின் பொருளைத்தெரிந்து கொள்ளுதலுங் கூட மிக அருமையாய் முடியும் போலும். இப்படிப்பட்ட கால நிலைமையில், தொன்றுதொட்ட நம் தமிழ் நூல்களின் உண்மை வடிவையும் உண்மைப் பொருளையும் காப்பாற்றி வைக்க, நாம் விரைதல் வேண்டுமன்றோ?

இனி, பிறபாஷைகளைக்கற்கும் சிறுவர்களுக்கோ, அப்பாஷைகளின்கண் அமைந்து கிடக்கும் அருமையான விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுதற்கு முன்பாகவே, அதற்குக் கருவியாகிய அவ்வந்நிய பாஷாஞானம் நன்றாய் ஏற்படுவதற்கே பல நாள் பிடிக்கின்றன. அவ்வருமையான விஷயங்களெல்லாம் தமது சுய பாஷையின்கண் அமைந்து கிடக்குமாயின், அவ்வந்நிய பாஷாஞானத்துக்கு வேண்டிய காலத்திற்குள்ளாகவே, அதற்காகச் செலவிடும் பொருளையும், மனோசக்தியையும், உழைப்பையும், இளமைப்பருவத்தையும், வைத்துக்கொண்டு நமது கூட்டத்துச்சிறுவர்கள் எவ்வளவோ விஷயங்களை அறிந்துவிடுவார்களே. இப்படிப்பட்ட கால நிலைமையில் நமது கூட்டத்து வறியோரும் செல்வருமாகிய யாவருக்கும் எளிதிற் பயன்படும்படி, பிறபாஷைகளிலுள்ள அருமையான விஷயங்களையெல்லாம், நம் தமிழின்கண் மொழிபெயர்த்தற்கு, நாம் விரைதல் வேண்டுமன்றோ! அப்படிச் செய்து, பிறகூட்டங்களில் வளர்ந்து செழித்திருக்கும் நூதன முறைகளையெல்லாம், யாவருக்கும் காட்டிவிடுவோமாயின், தொன்றுதொட்டே அறிவுக்கும், பொருளுக்கும், ஆற்றலுக்கும், பிறப்பிடமாகிய நமது கூட்டத்தார், எவ்வளவுதான் தமது பெருமையை உலகத்தில் நாட்டிவிடமாட்டார்கள்?

அறிவே வடிவாய் நின்று, அவ்வறிவின் ஓர் அணுவினா லேயே உலக முழுவதையும் அளந்து, 'இந்த நாட்டிலிருந்து ஒரு காற்றுவது தம்மீது வீசாதா?' என்று பிறநாட்டார்களைக் காக்கும்படி பண்ணிய நம்முன்னோரது பெருமையையெல்லாம் கட்டுக்கதையாக்கி நம்மவர், கண்டதே காட்சியாக வேறு நிலைமையில் இருக்கின்றார்களாதலின், 'காலத்துக்கு ஏற்ற கோல'மாய், இவ்வாறு கூறினேன்.

அறிவும் பொருளும் படைத்து, பொது நன்மைக்காகப் பாடுபடுதற்குரிய ஆற்றலுடையவர்களாயிருந்தும், தம்மையே கதியாகவுடைய தமது கூட்டத்து ஏழைகள் முன்னுக்கு வருதற்கு வேண்டிய வழிகளையெல்லாம் செய்யாராயின், அவ்வளவோடு போமோ? பிராமணார்த்தம் சாப்பிட்ட ஒருவன், இப்படியே என்நாளும் வயிறு நிரம்பியிருக்கும் என்று எண்ணி, தன் பங்கு மனைகளை யெல்லாம் விற்றுவிட்ட கதையாய் முடிந்து, தமது பரம்பரையில் வாழையடி வாழையாய்த் தோன்றி, மற்ற ஏழைகளோடு உறவாட இருக்கிற எத்தனையோ பிள்ளைகளுக்குங்கூட, நிலையான நன்மைதேடி வைக்காதவர்களன்றோ ஆகிறார்கள். 'அண்டை வீடெல்லாம் பாழானால் நின்ற வீடும் பாழேயன்றோ?' உள்ளவரையில் தமது காலத்தைக் கழிப்பதற்கு யாருக்குத்தான் தெரியாது? தமது கூட்டத்தாருக்கு மேல் வரக்கடவதாகிய கேட்டினை முன்னதாகவே அறிந்து, அது வாராமற் காப்பதற்கு உழைப்பவர்களன்றோ தீரர்கள். ஆதலின், நமது கூட்டத்துட் பிறந்திருக்கும் வீரர்கள், 'நாம் பிறந்த கூட்டத்தை நிலைதளராது தாங்கி, இப்பொழுதே உயரச்செய்வேம்,' என்று கங்கணங் கட்டிக்கொள்வார்களாக. 'குடி செய்வலென்னுமொருவற்குத் தெய்வம், மடிதற்றுத்தான் முந்துறும்' என்ற திருவாக்கின்படி 'நாம் பிறந்த குடியினை உயரச்செய்வேம்' என்று, அதற்கேற்ற காரியங்களில் முயல்பவர்களுக்கு தெய்வம் தான் முன்னின்று அக்காரியங்களை யெல்லாம் கைகூட்டி வைக்காதோ?

இதுகாறும் கூறியவற்றாற்போந்த பொருள் என்னையெனின்:— தமிழ் வழங்கும் நமது கூட்டம் அறிவாலும் பொருளாலும் ஒற்றுமையாலும் ஏழையாகி, நாளுக்கு நாள் நிலைதளர்கின்றதாகலானும்; நமது கூட்டம் முழுவதும் அறிவு செழித்து, பொருள் தழைத்து, ஒற்றுமை உறுதிப்பட்டு நீடூழி நிலைத்து நிற்றல் வேண்டின், அக்கூட்டத்தாருக்கு நாம் செய்யவேண்டிய எவ்வித நன்மைகளும், அவரெல்லாருக்கும் எளிதாய் நிற்கும் தமிழ் பாஷையின் மூலமாகவே நடந்தேறுதல்வேண்டுமாதலானும்; அப்படிப்பட்ட தமிழ்ச்சங்கங்களைக் கூட்டுதல் நம்மவர்க்கு இன்றியமையாததொன்றென்பதே.

தமது கூட்டத்தின் பொது நன்மைக்காக உழைக்க முன்வந்தவர்களுக்கு, தாம் உழைக்கவேண்டிய உண்மை வழியைத் தெரிந்துகொள்வதற்கும், தெரிந்துகொண்ட அவ்வழிகளில் யாவரும் ஒத்து உழைப்பதற்கும், சங்கங்கள் வேண்டுமென்பதனை அறியாதார் யார்? ஆதலின், தமிழ் வழங்கும் நாட்டின் சிறந்த ஊர்களிலெல்லாம் ஒவ்வொரு சங்கத்தைக் கூட்டுதல் வேண்டும். அச்சங்கத்துக்கு, அவ்வூரைச்சேர்ந்த தமிழ் மொழிவல்லோரும், பிறமொழிகளில் வல்லோரும், செல்வப் பொருளிற் சிறந்தோருமென்னும் முத்திறத்தினரும் அங்கத்தினராதல் வேண்டும். அவ்வங்கத்தினர்களோ, தமக்குள் ஓர் தலைவரையும் தேர்ந்துகொள்ளுதல் வேண்டும். தேர்ந்துகொண்டு, பின்னர் யாவரும் தம்மில் ஒத்து உழைத்தல் வேண்டும். அதன்மேல், அவ்வெல்லாத் தமிழ்ச்சங்கங்களையும் தனக்குக் கிளைகளாகக்கொண்டு, நாட்டிற்கே பொதுவாய் நிற்கும் தமிழ்நாட்டுச் சங்கமொன்றைக் கூட்டுதல் வேண்டும். அத்தமிழ்நாட்டுச் சங்கத்துக்கு, எல்லாக்கிளைச் சங்கங்களின் தலைவர்களும் அங்கத்தினர்களுமாகிய எல்லாரும், அங்கத்தினராதல்வேண்டும். அவ்வங்கத்தினர்களே தமக்குள் ஓர் தலைவரையும் தேர்ந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு ஏற்படுமிடத்து, தமிழ்நாடு முழுவதும், நமது நமது என்று அபிமானித்து, ஒரே மனதாய் உழைக்குமாதலின், அப்பொழு

தன்றோ நமது நாடு முழுவதும் செழித்தற்கு வேண்டிய உண்மையான உழைப்புத்தொடங்கியதாகும்?

இப்படிப்பட்ட உழைப்பை மேற்கொள்ளுகின்ற ஒவ்வொருவரும் மறவாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது:—சங்கத்தின்கண், பெரும்பான்மையோருக்கும் ஒன்றாய் முடிந்த கொள்கையையே, கடைசியாகத் தமக்குங்கொள்கையாகக்கொண்டு, மகிழ்ந்து ஒத்து உழைக்கக்கடவர். அவ்வாறின்றித் தம்மில் முரணுவாராயின், ஒற்றுமை சிதைதலான், 'பிள்ளைவரம் கேட்கப்போய்ப் புருஷனையே பறிகொடுத்த' கதையாய் முடிந்து, தமது கூட்டத்துக்கே தீமையைத் தேடிவைத்தவர்களாவார்களாதலின், 'ஆக்கங்கருதி முதலிழக்கும் செய்வினை, ஊக்கார் அறிவுடையார்' என்னும் பொய்யா மொழியினை, மறவாதபடி பாடம் பண்ணிவிடுவார்களாக.

இனி, அறிவுடையோர் இச்சங்கங்களால் நமது நாட்டிற்கு வரத்தகாததோர் நன்மை உண்டாயின், அதனை எடுத்துக்காட்டி என்னைத் திருத்துவார்களென்று நம்புகின்றேன். இன்றாயின், தத்தம் ஊர்களில் தமிழ்ச்சங்கங்களைக் கூட்டி, நமது நாட்டுக்கு நன்மையை வளர்ப்பார்களென்று நம்புகின்றேன்.

இனி, நம்மவர் ஒவ்வொரு நாளும், 'பொருளிலார்க்கிவ்வுலகமில்லை' என்பதை மறவாது, 'இன்றைக்கு இவ்வளவு பொருளைத்தேடினேம்' என்று கணக்குப்பார்த்து மகிழ்வதுபோலவே, ஒவ்வொரு நாளும், 'அருளிலார்க்கவ்வுலகமில்லை' என்பதையும் மறவாது, 'இன்றை இவ்வளவு அருளைத் தேடினேம்' என்றும் கணக்குப்பார்த்து மகிழ்வார்களாக.

இனி, நம்மவர், ஒவ்வொரு நாளும் 'கடவுளே என்மீது உமது அருளைக்காட்டும்' என்று வேண்டிக்கொண்டு மகிழ்வதுபோலவே, 'ஒவ்வொரு நாளும், நாம் நமது கூட்டத்து ஏழைகளின்மீது, இன்றைக்கு எவ்வளவு அருளைக் காட்டினேம்' என்றும் எண்ணிப்பார்த்து மகிழ்வார்களாக.

"ஒற்றுமைக்குக் காரணமும் நன்மையே
ஒற்றுமையின் காரியமும் நன்மையே"

பண்டிதர் R. சுப்பிரமணிய ஐயர்.

---

# பூகம்பமும் எரிமலையும்.

மழையும், ஆறுகளும், மூடுபனியும், பனிக்கட்டியும், காற்றும், அலைகளும் கொஞ்சமேனும் ஓய்வு ஒழிவின்றித், தங்கள் தங்கள் தொழில்களைச் செய்துவருவதால் பூமியின் மேற்புறம் தாக்குண்டு கொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்துபோகிறது. ஆனால் அதில் ஒரு அணுக்கூட நிர்மூலமாக நாசத்தையடைய வில்லை. பூமியின் மேற்புறத்தில் இருந்து கொண்டுபோகப் பட்ட ஒவ்வொரு நுண்மணலும் சீக்கிரமாகவாவது, மெதுவாகவாவது கடலையடைந்து அதில்படிகிறது. பூமியின் மேற்புறத்திலுள்ள வஸ்துக்களை ஆறுகள் கொஞ்சங்கொஞ்சமாகச் சமுத்திரத்தில் சேர்ப்பதால், அப்பூமியின் உயரம் நாளடைவில் குறைந்து சமுத்திர நீர்மட்டத்திற்குச் சமமாய்விட்டபிறகு ஆறுகள் அறுத்துச் செல்வது நன்கு புலப்படாது. இவ்விதமாக பூமியின் மேல்புறத்தின் அழிவிற்குக் காரணமாகிய கர்த்தாக்களின் தொழில்களுக்கு இடையூறு ஒன்றும் நேரிடாவிட்டால் சாகரநீர் மட்டத்திற்குமேல் தோன்றும் தரையின் பரப்பு, அக்கடல் நீர்பரப்பினும் மிகக்குறைய, நாளடைவில் சமுத்திர நீர் எங்கும் பரவி, தரையைத் தன்னுள் அடக்கிவிடும்.

பிரபஞ்ச இயற்கையின் தொழில்களால் கடலின் அடியிற் படிந்த வஸ்துக்களெல்லாம் மேலே கிளம்பி புதிய திட்டு, தீவு, முதலியவைகளாக அமைந்து சிலவிடங்களில் பூபாகத்தை உயர்த்துகின்றன. இவ்விதமாகச் செய்யக்கூடிய கர்த்தாக்களில் முக்கியமானவைகள் பூகம்பமும் எரிமலையுமே; ஒரு பூகம்பம் நேரிட்டபிறகு பூமியின் மட்டமானது மாற்றப்பட்டிருப்பதை அடிக்கடி எவருங் காணலாம். சிலசமயங்களில் பூமியின் பரப்பு அமுங்கியும் போகக்கூடும். ஆனால் பூமியின் உயர்ச்சியை அதிகமாகச் செய்வதே பூகம்பத்தின் முக்கியமான தொழிலாகும்.

பூமியானது மேலே கிளப்பப்படுகிறது என்பதற்கு அட்மிரல் பிட்ஸ்ருய் (Admiral Fitzroy), மிஸ்டர் டார்வின் (Mr. Darwin), இவர்கள் தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை ஓரத்தைப் பரிசோதித்து வருங்காலத்தில், அவ்விடங்களில் சில பாகங்கள் பிரபஞ்ச இயற்கையின் மாறுபாட்டால் மேலே கிளப்பப்பட்டவைகளென்று எழுதிவைத்திருக்கிறகுறிப்புகளே நமக்கு முக்கிய ஆதாரங்களாயிருக்கின்றன. அப்பிரதேசம் பூமியின்கீழ் உண்டாகும் நிலைதளர்ச்சிக்கு உள்ளானவைகள். 1835ம் வருஷத்தில் உண்டான பூகம்பத்தால் அநேக பட்டணங்கள் அமிழ்ந்தது மல்லாமல், "ச்சிலி" நாட்டின் கடற்கரையோரமாக "கோபியாபோ" முதல் "ச்சிலாய்" வரையிலும் அவ்வதிர்ச்சியானது யாவராலும் உணரப்பட்டது. அந்த பூகம்பத்திற்குப் பிறகு "கான்ஸிபியான்" என்னும் குடாவின் அடிப்பிரதேசம் 4 அல்லது 5 அடி உயரம் அதிகமாகக் கிளப்பப்பட்டிருப்பதைக் கண்டுகொண்டார்கள். "கான்ஸிபியாவின்" குடாவினின்று 25 மைல் தென்மேற்கு மூலையில் இருக்கிற "சாண்டாமேரியா" என்னும் தீவில் அந்த உயர்ச்சியானது நன்கு புலப்பட்டது. அளந்ததில் அத்தீவின் தென்மேற்குமூலை 8 அடி உயரமும், வடக்கு 10 அடி உயரமும் உயர்ந்திருக்கக் கண்டார்கள். இப்பி மீன்களின் தங்குமிடங்கள் 10 அடி நீர்மட்டத்திற்குமேல் கிளப்பப்பட்டன. முதலில் கடல்நீரால் மூடப்பட்ட பரந்த சமமான கற்பாறை நீர்மட்டத்திற்குமேல் கொண்டுவரப்பட்டது. இதேமாதிரியாகக் கடலின் அடிப்புறம் கொஞ்சம் உயர்த்தப்பட்டது. எப்படி அறிந்தார்களென்றல், அத்தீவைச் சுற்றியுள்ள கடலின் ஆழத்தை பூகம்பம்நேரிடும் முன் எடுத்திருந்த குறிப்புடன் பிறகு எடுத்த குறிப்பை ஒப்பிட்டுப் பார்க்க பிறகு எடுத்தகுறிப்பு 9 அடி குறைந்திருப்பதால், பூமி மேலே கிளப்பப்பட்டது என்று கண்டுகொண்டார்கள். பூகம்பத்திற்குப் பிறகு கிளப்பப்பட்ட பூமி கொஞ்சம் இறங்கி உட்கார்ந்தபோதிலும் பிறகு அது ஸ்திரமாகத் தங்கிவிட்டது. அதிலிருந்து தென் அமெரிக்காவின் மேற்குக் கடலோரம் பல தடவைகளில் உண்

டான பூகம்பங்களால் கொஞ்சங் கொஞ்சமாக அநேக அடி உயரம் கிளப்பப்பட்டிருக்க வேண்டுமென்று நிதானித்தார்கள்.

இப்படி, தரை சமுத்திரமட்டத்திற்குமேல் கிளப்பப்படுமாயின் அப்படி உயர்த்தப்பட்ட தரை பூமியின் பரப்பை விருத்திசெய்வதுமல்லாமல், எப்போதும் உண்டாகிற நிலவழிவை ஈடுசெய்கின்றது. 1822ம் வருஷத்தில் "ச்சிலி" என்னும் தேசத்தில் உண்டான பூகம்பத்தால் "எகிப்த்" தேசத்தில் உள்ள லக்ஷம் செய்குன்றுகளின் நிறைக்குச் சமமான பூமியானது தென் அமெரிக்காவுடன் சேர்க்கப்பட்டதென்று சர். சி. லயல் (Sir. C. Lyoll) சொல்லியிருக்கிறார். பூகம்பத்தின் ஒரு அதிர்ச்சியானது நீர்மட்டத்திற்குமேல் ஒரு பெரிய தரையைக் கொண்டுவருமாயின் பூகம்பத்தின் பல அதிர்ச்சிகள் பூமியின் மேல்பாகத்தை புதிப்பிப்பதிலும் இடைவிடாது உண்டாகிற நில அழிவுக்கு ஈடாகப் புதிய வஸ்துக்களைச் சேர்ப்பதிலும் மிக உதவுகின்றனவென்றும் நன்கு புலப்படுகின்றது. பூகம்பம் என்பது பூமியின் புறணி அசைவு. அது அடிக்கடி சம்பவிக்கக்கூடும். சிலசமயங்களில் பூமியினிடத்தில் யாதொரு மாறுபாடின்றி நேரிடினும் நேரும். ஆனால் அநேகமாக பூகம்பத்தின் அதிர்ச்சியால் பூமியின் ஓர் பாகம் மேலேயாவது உயர்த்தப்படுகின்றது; அல்லது கீழேயாவது அமிழ்த்தப்படுகின்றது. இப்படி மாறுபாடடைந்த பூமி கொஞ்சகாலத்தில் முன்னிருந்த நிலைமைக்கு வருவதில்லை. அந்த மாறுபாடு நிரந்தரமான மாறுபாடாக இருக்கின்றது.

பூமியின் உட்புறத்திருந்து மேலே சுடிதியிலிடித்தால் எவ்விதமோ, அதேவிதமான கலக்கத்தை செய்கிற அதிர்ச்சிக்கு பூகம்பம் என்று பெயர். பூமியின் மத்தியினின்று உண்டான அதிர்ச்சி நாலாபக்கங்களிலும் பரவும். அநேகமாக பூகம்ப அதிர்ச்சியானது தரையின்கீழ் உண்டாகின்ற நாதம்போன்ற சத்தத்துடனாவது இடிபோன்ற சத்தத்துடனாவது சம்பவிக்கும். பூகம்ப அதிர்ச்சி சிலசமயம் பூமியை உயர்த்தியும், சிலசமயம் தாழ்த்தியும், சிலசமயம் பூமியைப் பிளந்தும் செல்

லும். அப்பிளப்புகள் தம்வசப்பட்டவைகளைக் கவர்ந்து மூடினும் மூடும். அல்லது கவந்தன் வாய்போன்று பெரிய கிடங்குகளாய்த் தங்கினும் தங்கும். அப்படித் தங்கினல் அவைகள் அத்தேசத்து நீரோட்டங்களின் கதியை மாற்றும். பூகம்ப அதிர்ச்சி பூமியின்வழியாக வெகுதொலைக்குச் செல்லும். 1755-ம்வருஷத்தில் லிஸ்பன் நகரத்தை அழித்த பூகம்பத்தின் அதிர்ச்சியானது ஸ்காட்லாண்டு தேசத்திலிருக்கிற லாக்லாமாண்டென்னு மேரிநீரின் தத்தளிப்பால் நன்குணரப்பட்டது. அதிர்ச்சியுண்டாகும் இடம் கடலுக்குச் சமீபமாகவிருக்குமாயின் அது தரையைக் காட்டிலும் நீரை அதிகமாகத் தாக்குகிறது. அவ்வித நீரதிர்ச்சி பூமியி னதிர்ச்சியைவிட அதிக அபாயத்தை விளைவிக்கின்றது. 1777-ம்வருஷம் மேமாசத்தில் தென் அமெரிக்காவில் மேற்குக் கடற்கரையோரமாயிருக்கின்ற லைமா (Lima), அரிகா (Areka) என்னும் பட்டணங்களிலுண்டான பூகம்பத்தி னதிர்ச்சியால் சமுத்திரம் மிக கொந்தளித்து மிகப் பாழ்படுத்தியதென்று அநேகர் கேள்விப்பட்டிருக்கிறர்கள். 1901-ம்வருஷம் பீப்பரவரிமீ 6-ந்தேதி நேரிட்ட பூகம்பத்தால் நாம் எல்லோரும் என்ன நேரிடுமோவென்று பயந்திருந்தோம். அதே வருஷத்தில் இந்தியாவின் வடக்கிலுண்டான பூகம்பம் அஸ்ஸாமில் (Assam) ஒரு பெரிய போஸ்ட்டு ஆபீஸை அழித்து இருந்தவிடம் தெரியாமல் பெரியதடாகமாய் மாற்றிவிட்டதென்று பத்திரிகைமூலமாய் அறிந்திருக்கிறோம். மிஸ்டர். ஆர். மால்ட் என்பவர் பூகம்ப ஆவிர்ப்பவத்தை அறியத் தன்னுடைய முழு மனதையுஞ்செலுத்தி அவ்விஷயத்தில் தன்வாழ்நாளைக் கழித்தார். பூகம்பத்தின் உற்பவஸ்தானம் பூமியின் உட்புறத்தில் வெகு தொலையில் இல்லையென்றும், பூமியின் மேற்புறத்தினின்று 30 மைலுக்கு உட்பட்டதென்றும் அவர் ஆராய்ச்சிசெய்தறிந்தார். 1857-ம்வருஷத்தில் நேபிள்ஸ் நகரில் உண்டான பூகம்பத்தின் உற்பத்தியிடம் தரையின் மேற்புறத்தினின்று 8, 9 மைல்களுக்கு உட்பட்டதென்றும் அவர் நிதானித்தார். 1869-ம்வருஷத்தில் இந்தியாவில் காச்சார் என்னுமிடத்தில்

நேரிட்ட பூகம்பத்தி னுற்பத்திஸ்தானம் மேற்புறத்தினின்று 30 மைல் ஆழத்திலுண்டான தென்று டாக்டர் ஒல்டுஹாம் என்பவர் கண்டறிந்தார். இந்த இந்துதேசத்தின் தென்பாகத்தில் பூகம்பம் நேரிடுவது மிகவும் அபூர்வம். ஆனால் மற்றப் பிரதேசங்களில் சம்பவிப்பது அவ்வளவு அபூர்வமல்ல. ஏனென்றால் ஒருவருஷத்தில் சம்பவிக்கிற பூகம்பங்களின் எண்ணிக்கையைச் சராசரியாக அளவிடில் அவைகள் வாரத்துக்கு மூன்றுவீதம் வருகின்றன. அவை மிகவும் அதிகமல்ல. 1766-ம் வருஷத்தில் 104 தட்வை பூகம்பம் நேரிட்டதென்று பண்டிதர் புக் (Professor Puch) என்பவருடைய வருஷ அறிக்கைப்பத்திரத்தால் தெரியவருகிறது. அதற்கு முந்திய வருஷத்தில் பூகம்ப அதிர்ச்சி 100 தினம் நேரிட்டதென்று குறிக்கப்பட்டிருக்கிறது. மேலே சொல்லப்பட்டனபோக அநேக சில்லறையதிர்ச்சிகள் போகமுடியாத உள்நாட்டில் நேர்ந்தவைகள். அவைகள் அவ்வருஷத்து அறிக்கைப் பத்திரத்தில் குறிக்கப்படவில்லை. இவ்வதிர்ச்சிகளால் நேரிட்ட தீங்குகள் மிகவும் சொல்பமாகவே யிருக்கவேண்டும். ஆதலால்தான் அவைகள் குறிக்கப்படாமல் விடப்பட்டனபோலும்.

(இன்னும் வரும்.)

K. ராமானுஜ ஐயங்கார்.

---

# ஏனெயிட்.

## முகவுரை.

நமதுபாஷை ஓங்கிவளராது தாழ்வதற்குக் காரணம் அநேகமுள்ளன. ஆயினும் அதை விருத்திசெய்வது தென்னாட்டாரின் முக்கிய கடமையன்றோ? இவ்வரிய பாஷையை வளரச்

செய்வதற்கு பற்பல உபாயங்கள் இருப்பினும் ஆங்கிலேயம் முதலிய பாஷைகளின் சாஸ்திரங்களை தமிழில் மொழிபெயர்ப்பதே பிரதான கருவியென்பது எல்லாராலும், அங்கீகரிக்கப் பட்டது. இதை அனுசரித்து, ஆங்கிலேயர் முதலியவர்களுக்குத் தாய்பாஷையாயும் நம்முடைய சம்ஸ்கிருதத்துக்கு நிகரான லாட்டின் என்னும் ஓர் அரியபாஷையில், இவ்வுலகத்தில் காப்பியம் என்று பெயர்வகித்த பழைய பிரபந்தம் மூன்றுக்குள், எப்படி சம்ஸ்கிருதத்தில் ஸ்ரீராமாயணமும் கிரேக்கில் ஈலியடும் அழியாத சிறப்புற்றிருக்கின்றனவோ, அவ்வண்ணமே புகழ்தங்கிய எனெயிட் என்ற ஒரு அரிய பிரபந்தத்தை மொழிபெயர்க்கலானேன்.

இப்பிரபந்தமோ பக்த சிரோமணியாகிய எனேயாஸ் என்ற ராஜகுமாரன் ஜூனோ என்னும் ஒரு கொடிய தேவதையின் கோபத்தால் குடும்பத்துடன் துரத்தப்பட்டுத் தகப்பனையும் மனைவியையும் இழந்து அளவற்ற கஷ்டங்கள் அனுபவித்து தன்னை ஆதரித்துத் தன்பேரில் மோகங்கொண்ட டிடோ என்ற ஒரு ராஜஸ்திரிக்கு இணங்காது விட்டகன்று கடைசியாய் டர்னஸ் என்பவனோடு யுத்தம்புரிந்து லவினியா என்பவளை விவாகஞ்செய்து இட்டலி தேசத்தில் ஸ்தாபிதமான சரித்திரத்தைப்பற்றியது. எட்டுவருஷத்துச் சரிதம் அடங்கிய இப் பிரபந்தம் 12 காண்டமாக வகுக்கப்பட்டு வர்ஜில் என்னும் வித்வானுக்கு எழுதிமுடிய 11 வருஷகாலமானதென்றால், பகிரங்கமாய் விளங்கும் தாத்பரியம் தவிர ஏனைய இரண்டு பிரபந்தங்களைப்போல் அந்தரங்க தத்வார்த்த முடையதென்பதை திண்ணமெனக் கொள்வாருமுளர். ஆனால் இம்மொழிபெயர்ப்பில் யதார்த்தமாக எழுதினால் மேற்கண்ட பாஷைகளில் பயின்றோர் அல்லாத ஏனையோருக்கு நன்கு விளங்காது. ஆதலினால் சுலபமாய்த் தெரிவிக்கக்கூடாத கதாகோஷ்டிகளை விட்டு, கருத்தும் பொருளும் தொடர்பாய் அறியுமாறு வேண்டுவன சேர்த்தும், வேண்டாதன அகற்றியும், எழுதலானேன். இதில் மானிடர்க்குறிய எவ்வளவு தவறுதலிருப்பினும், என்

னிலும் வலியோர் சமர்த்தர் ஆகிய யாவருக்கும் குற்றஞ்செய்யினும் குணமெனக்கருதுங் கொள்கையானது இயற்கையாய் உண்டென்பதை நிச்சயமாய்வகித்து இச்சிறிய மங்கை முயற்சி புரியலானேன்.

## முதற்காண்டம்--யாத்திராகாண்டம்.

(இதில் புயலின் வர்ணிப்பு யாவராலும் ஆச்சரியப்படத்தக்கது.)

முந்தி இனிய கீதத்தால் ராஜஸ்துதிகளைப்பாடி, பிறகு விவசாய விஷயமாய் குடியானவர்கள் மனசு பூரிக்க பூமி பயன் அளிக்கும் வண்ணம் நிலவளம், சாகுபடி, அறுவடை, இதுகளைப்பாடிய நான் இனி யுத்தவிஷயமாய்ப் பாடுகிறேன்.

பக்த சிரோமணியாகிய ட்ராய் தேசத் தரசகுமாரனை எனேயாஸ் என்னும் வீரன், கொடிய சூனோ என்கிற தேவியின் ஆற்றொணாத கோபத்தால் தேசம்விட்டுத் துரத்தப்பட்டு, சமுத்திரத்திலும் பூமியிலும் பற்பல கஷ்டங்கள் அனுபவித்து, யுத்தத்திலும் துன்பப்பட்டுக், கடைசியாய் லாட்டின் வம்சத்தாருக்கும் ரோமாபுரிக்கு மூலமாகிய ஓர் நகரம் ஸ்தாபித்து, அதில் குடியேறச்செய்தானே! சரஸ்வதி! இவ்வளவு கஷ்டநிஷ்டூரங்கள் ஓர் தர்மப்பிரபுவுக்கு உண்டாகும்படி, இந்திராணியாகிய சூனோ என்பவள் கோபிக்கவேண்டிய காரணம் யாது? தெய்வலோகத்திலும் இப்பேர்க்கொத்த கோபம் வருவதுண்டோ? எனக்குத் தெரிவிப்பாயாக!

வன்மையிலும் வீரத்தன்மையிலும் சிறந்த கார்த்தேஜ் என்னும் பட்டணத்தைத் தனக்குப் பிரதானஸ்தானமாக்கி, அதில் தன்னுடைய தேர் முதலிய உபகரணங்களைஸ்தாபித்து, அதையே லோகத்துக்கெல்லாம் சிகாமணியாகச்செய்ய சூனோ என்பவள் வெகு ஆவலாய்க் கருதினள். ஆனால், தெய்வாக்கினையால் ட்ராயினர்கள் இந்நகரத்தைக் கைக்கொண்டு யுத்தவீரர்களாய் எங்கும் பரவி வாழும்படியாய் ஏற்பட்டிருப்பதை ஞானதிருஷ்டியால் முன்னாடி அறிந்தவளாய், ஏர்க்கனவே இவ்வம்சத்தலைவராகிய பாரிஸ் என்பவர், முற்காலத்தில் சூனோ,

மினர்வா, வீனஸ், என்ற மூன்று தேவதைகளுக்குள் யார் அழகிற் சிரேஷ்டர் என்ற பந்தயம் ஏற்பட்டபோது, மேற்படி பந்தய நியாயாதிபதியாய் வீற்றிருந்தகாலையில், தன்னைச் சிலாகியாமல் வீனஸ் என்பவளுக்கு வெகுமதி அளிக்க, அவமதிப்பை மனத்துட்கொண்டு, அந்த வம்சப்பூண்டை வேரறுக்க முயன்றனள். லோகப்பிரசித்தமான ட்ராய் என்னும் பழைய யுத்தத்தில் மேற்படி பட்டணம் மோசடியாய் நெருப்புண்டு எரியவே, அதன்வம்சத்தார் சிதறிப்பிரிந்து கப்பலேறி யாத்திரைபுரிந்து, அளவற்ற துன்பங்கள் அனுபவித்து, கடைசியாய் இட்டாலியில் தங்கி ரோமாபுரி பட்டணத்தை ஸ்தாபித்தார்கள். ஓர் நகரங் காண்பதென்றால் சாமானிய சிரமமா ஆகும்?

ஆபத்துக்குத்தப்பினுல் போதுமென்று எண்ணி, ட்ராயினர்கள் கப்பலேறிச் சமுத்திர யாத்திரைபுரிவதை அறிந்தவளாய், ஜூனோ என்பவள் பழையவருத்தங்களை மறவாது, பின்வருமாறு யோசனைபுரிந்தனள். — என் சபதத்தினின்றும் நான் சிறிதும்வழுவேன். ட்ராய் வம்சத்தார் இட்டலிதேசத்தை ஒருகாலத்திலும் அணுகுவார்களா? விதியானது என்னிலும்வலிதா? ஒரு கேவலம் மினர்வா என்பவள், தன்னைச் சரணடைந்த காஸ்ஸேண்ட்ரா என்ற ஸ்திரியைத்தொடர்ந்து பலவந்தம்செய்த குற்றத்திற்காக கிரேக்கிய கப்பல்களை எரித்து, சமுத்திரத்தில் அமிழ்த்தினளன்றோ? என் புருஷனுகிய ஜூபிட்டரின் இடிமின்னல்களையும் புயல்களையும் ஏவி, கப்பல்களைச் சின்னபின்னஞ்செய்து, மேற்படி ஆஜாக்ஸ் என்பவரையும் ஒருபாறையில் மோதினளன்றோ? நானே இந்திராணி! தேவேந்திரனுகிய ஜூப்பிட்டருக்கு மனைவி! இப்படியிருந்தும் எத்தனையோ வருஷம் ஒருவம்சத்தாருடன் யுத்தம் புரிந்துகொண்டிருந்தால், என்னை ஆர்தான் பஜிப்பார்கள்? என் ஆலயங்களுக்கு இனி தீபாராதனையும் நடக்குமா?—

இவ்வாறு கோபத்துடன் பற்பல யோசனைபுரிந்து, மனம் புண்ணுகி, புயல்களுக்கெல்லாம் இருப்பிடமான ஏயோலியா என்னும் நாட்டுக்குச்சென்றுள். அச்சமயமோ புயலரசனுன

ஏயோலியஸ், அடங்காத்தன்மையுடன் சீறிமீறுகின்ற காற்றுகளைச் சிறையிலிட்டு, தான் சிம்மாசனத்தில் வீற்றிருந்து, சக்கிரபாணியாய், அலைகளின் கோபத்தைத்தணித்து, அம்ரிக்கைசெய்துகொண்டிருந்தார்! அவ்வாறு அவர் செய்யாவிடிலோ, அலைகள் கோபாக்கினிமூண்டு, சமுத்திரம், பூமி, வானம், இவைகளை நிலைபெயர்த்து, ஆகாசத்திலே ஊதி பெறிந்துவிடும். இது கருதியன்றோ, ஈஸ்வரனானவர் அந்தகாரத்தையே ஒரு குகையாகச்செய்து, அதில் இவைகளை அடைத்து, கனத்தமலைகளை அதின்மீது பாரமேற்றி, அலைகளைச் சமயோசிதமாய் அடைத்துவைக்கவும் வெளிவிடவும் சக்தியுள்ள ஒரு ராஜனை நியமித்தனர். இவ்வரசனிடம்சென்று, ஆசை வெட்கமறியாததென எவ்வளவோ தாழ்மையுடன் ஜூனோ என்பவள் பிரார்த்தித்ததாவது:— காத்துக்கெல்லாம் ராஜனே! உன் ஆக்கினையினாலன்றோ சமுத்திரம் கரையினெறி நிற்கிறது! எனக்குத் துரோகிகளான ட்ராயினர் கப்பலேறிப் பரிவாரத்துடன் இட்டலிக்குவரும்படியாகிறதோ? காற்றையேவி அவர்கள் கப்பல்களை கவிழ்த்திடாயோ? அல்லது அலைகளைத் திசைதப்பத் துரத்தி நாசமாக்காயோ? இதற்கு நான்செய்யுங் கைம்மாறு என்னிடத்திலிருக்கும் தெய்வகன்னிகைகள் பதினால்வரில் அழகுசிரோமணியாகிய தேய்யோபியா என்பவளை உனக்குவிவாகஞ்செய்துவைத்து, அழகிய சந்தானசம்பத்துடன் உன்னை நீடூழி வாழச்செய்கிறேன் என,

அவ்வுரைகேட்ட ஏயோலியஸ் என்பர் பின்வருமாறு கூறலுற்றார்: இந்திராணி! கைம்மாறு புரிவது தங்கள்மனோபீஷ்டம்! தங்களுடைய ஆக்கினையை நிறைவேற்றுவதோ என்னுடைய கடமை. என்னுடைய ஆணைச்சக்கிரமும், தெய்வலோக சஞ்சாரமும், நான்பூண்டிருக்கும் ராஜரீகமும், யாவும் தங்கள் கிருபையாலன்றோ?

(இன்னும்வரும்.)

A. சிவக்கொழுந்து முதலியார், B. A.

# விசுவநாதம்.

## கதாசங்கிரகம்.

விஜயநகர் அரசன் கிருஷ்ணதேவராயனு, விஜயபுரி சுல்தான் இஸ்மேல் அடில்ஷா செய்துவந்த துன்பங்களைச் சகியாதவனுகிப் பகைமேற்கொண்டிருந்தான். வடுகல் துறைமுகத்தும் ரேய்ச்சூர் முற்றுகையிலும் முதுக்கல் போர்க்களத்தும் சுல்தான் தனது விரோதத்தைக் காட்டினதுமன்றி, பொதுவாக இருந்த போர்த்துகீயரோடு உறவாடி அவர் நடுநிலைமையையும் கெடுத்துவிட்டான். அரசன் இக்கவலையினுல் மிகவும் வருந்திக்கொண்டிருந்தான்.

இப்படி இருக்கையில், சந்திரசேகரபாண்டியன் வீரசேகரச் சோழனுல் தன்னுட்டினின்றும் துரத்தப்பட்டு, சேனையையும் செல்வத்தையும் இழந்து விஜயநகரம் புகுந்து கிருஷ்ணதேவனைச் சரணமாக அடைந்தான். கிருஷ்ணதேவன் அபயமளித்து, தனது களகர்த்தன் நாகமனைப் பாண்டியனேடுசென்று சோழனை வென்று மதுரையைப் பாண்டியனுக்குக் கொடுத்து வரும்படி ஆக்ஞாபித்தான். அவ்வாறே நாகமன் ஓர் பெருஞ் சேனையைச் சேர்த்துக்கொண்டு, பாண்டியனேடு சோழநாட்டுக்கு வந்து, சோழமாளிகைப்புறத்து வீரசேகரனை வென்று, அவனையும் கொன்று, அவன் நாட்டையும் கிருஷ்ணதேவன் வசமாக்கி, அந்நாட்டிற்கு ராஜப்பிரதிநிதியாக கிருஷ்ணதேவன் மைத்துனன் செவப்ப நாயக்கனை தஞ்சையில் இருத்தி, தன் சேனையோடும் பாண்டியனேடும் மதுரைக்குச் சென்று, அவனுக்கு முடி சூட்டி, அவன்கீழ் மந்திரியாகச் சிலகாலம் இருந்தான்.

விஜயநகரத்தில் நாகமன் புதல்வன் விசுவநாதன், இளவரசன் அச்சுதனோடு இணைபிரியாத் துணைவனாக வாழ்ந்துவந்தான். அப்போது அரசன் புதல்வி காஞ்சனையம்மன் விசுவநாதனிடத்தே மிகுந்த காதல்கொண்டு அவனையே மணம்புரிவதென்று இசைந்துஇருந்தாள். இப்படியிருக்க விஜயபுரி இளவரசனான மானு என்பவன் இவள் குணாதிசயங்களைக் கேள்வியுற்று இவளைத் திருடிக்கொண்டுபோய் தனது வைப்பாட்டியாக வைத்துக்கொள்ள நினைத்தான். அவன் தன் வார்த்தைக்குட்பட்ட சில பாதகரைக்கொண்டு தன் இஷ்டப்படியே காஞ்சனையைச்சிறைகொண்டு தனது அரண்மனையிலே அவளைவைத்தான். இதைக்கேட்ட விசுவநாதன் அரசன் தூதனெனச் சென்று சுல்தான் அடில்ஷாவுடன் பேசி வடுகல் துறைமுகத்து மகமதியர் ஸ்தானாதிபதியான ரஸல்கானுக்கு கண்டனை விதிப்பித்ததுமன்றி, அன்றிரவே நிலா முற்றத்தில் கிடந்து புலம்பிய காஞ்சனையின் நிலைமையைக் கண்டு வருந்தி அவளை விடுவிக்க நூலேணியொன்று அமைத்து அதன் வழியே அவளைக் கீழிறக்கி அவளுடன் பொழுது விடிவதன்முன் அந்நகரத்தை விட்டு விஜயநகரம் வந்து சேர்ந்தான்.

இது இங்ஙனமாக, பாண்டிநாட்டிலே நாகமன் தருமநெறி தவறி, பொருளாசையால் பாண்டியனைச் சிறைசெய்து சிம்மாசனம் ஏறினன். இச்செய்திகேட்டு கிருஷ்ணதேவன் உள்ளங்கலங்கி இருக்கையில் விஜயபுரியிலிருந்தும் ஓர் தூதன் வந்து துங்கபத்திரைக்கு வடபால் 10 மயில் அகலமுள்ள நாடெல்லாம் சுல்தான் ஆளுகைக்குட்பட்டதென்றும் அதையரசன் மறுப்பானாகில் போர் உண்டாகுமென்றான். அரசன் அது தன்னுடையதென்று வாதம்புரிய சண்டை நேர்ந்தது. அச்சண்டையில் சுல்தான் சேனை முறிபட்டோட மானு சிறைபட்டவுடன் ஓர் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. அவ்வுடன்படிக்கையின்படி துங்கபத்திரையின் வடபால் காவதநாடு விஜயநகரத்தைச் சேர மானுவும் சிறையினின்றும் விடுவிக்கப்பட்டான்.

இச்சமாதானம் முடியவும் கிருஷ்ணதேவன் நாகமனைத் தண்டிக்கவேண்டி தருமவழி தவறாத விசுவநாதனையே ஓர் பெருஞ் சேனையுடன் அனுப்பினான். விசுவநாதன் மதுரைக் குச்சென்று தன் தாய் கூறிய அதர்ம வழியை விலக்கித் தந்தை யுடன் போர்புரிந்து அவனைத் தளையிட்டு சந்திரசேகரனை விடுவித்து அவனைச் சிம்மாசனம் ஏற்றி அரியநாதனை மந்திரி யாக்கி தன் தந்தையுடன் விஜயநகரஞ் சென்றான்.

அங்கு நாகமன் கிருஷ்ணதேவனைப் பணிந்து தனது இரா ஜத்துரோகத்தை மன்னிக்கும்படி கேட்க அரசன் அவ்வாறே மன்னித்ததுமன்றி அவனைத் தன் பந்துவாக உறவாடி அவன் மகன் விசுவநாதனுக்குத் தனது புத்திரி காஞ்சனையை மணம் புரிவித்தான்.

கொஞ்சகாலம் சென்றபிறகு அரியநாதனிடத்திலிருந்து ஒரு தூதன் வந்து சந்திரசேகரபாண்டியன் இறந்தான் என் றும், அவன் மகன் குணவீரவர்மன் பித்தேறினான் என்றும், குடிகளை ரக்ஷிக்க ஓர் அரசன் வேண்டுமென்றும், மதுரை வாசிகள் விசுவநாதனையே தங்கள் அரசனாகத் தரவேண்டு மென்கிறார்கள் என்றும் கூறினான். அப்போது அரசன் மிகுந்த சந்தோஷமடைந்து காளிகாதேவியையும், அரச சின் னத்தையும் விசுவநாதனுக்குத் தந்து அவனைக் காஞ்சனையுடன் மதுரைக்கு அரசனாக அனுப்பினான்.

விசுவநாதன் மதுரை புகுந்து ஜனங்கள் இன்பமடையும் வண்ணம் செங்கோல் தரித்து அரியநாதனைத் தனது மந்திரி யாகவமைத்துக்கொண்டு காஞ்சனை களிகூற, (கி-பி) 1559-ஆம் முதல் (கி-பி) 1563-ஆம் வரைக்கும், அந்தணரும் பெரியோரும் வாழ்த்த மாந்தர்கள் இவனே அரசன் என்று கூற நன்னிலை கெடாது அரசுபுரிந்தான்.

## நடர்களும்—நடிகளும்.

கிருஷ்ணதேவராயர், விஜயநகர் அரசன்.
அச்சுதப்பன், விஜயநகர் இளவரசன்.
பக்க, அரசன்குரு.
சாலுவதிம்மன், கிருஷ்ணதேவன் மந்திரி.
தென்னல்ராமன், விதூஷகன்.
செவப்பநாயக்கன், கிருஷ்ணதேவன் மைத்துனன், தஞ்சையரசன்.
நாகமன், கிருஷ்ணதேவன் தளகர்த்தன், பாண்டியநாட்டைக்கவர்ந்தவன்.
விசுவநாதன், நாகமன் புத்திரன், காஞ்சனைகாதலன்.
அரியநாதன், சதாசிவராய், ஜீவராய், } படைத்தலைவர்.
வீரசேகரன், சோழன்.
கோலாகலன், சோழன்தளகர்த்தன்.
குபேரன், சோழன் யானைப்படைத்தலைவன்.
சொக்கலிங்கன், ஈழப்படைத்தலைவன்.
சந்திரசேகரன், பாண்டியன்.
சுல்தான் இஸ்மேலடில்ஷா, விஜயபுரி அரசன்.
கும்மல்கான், சுல்தான்மந்திரி.
சலாபத்கான், சுல்தான்சேனபதி.
அமீர்பீரித், சுல்தான் படைத்தலைவன்.
சுல்தான் மாலு, விஜயபுரி இளவரசன்.
மங்கம்ம, நாகமன்மனைவி.
காஞ்சனை, கிருஷ்ணதேவன் புத்திரி, விசுவநாதன்காதலி.
மதிவிலாசனி, மூர்த்தியம்மன், சின்னம்மன், கஸ்தூரிரெங்கம்மன், சுந்தரம்மன், லெட்சுமியம்மன், } காஞ்சனையின்தோழிகள்.
செவிலி, காஞ்சனையின்செவிலி.
மம்தாஸ், ஓர் காவற்பெண்.
நூர்ஜஹான், சலாபத்கான் மனைவி.
கனகவல்லி, சோழன்மனைவி.
பூந்தத்தை, ஓர் ஈழப்பெண்.

படைத்தலைவர்கள், கடைகாவலர்கள், சேவகர்கள், காலாட்கள், ஒற்றர்கள், யாழ்ப்பாண வீரர்கள், சிங்களவீரர்கள், மாதர்கள், தூதர்கள், சாதுக்கள், நகரவாசிகள், இவர்களும்—நடர்களும், நடிகளும் ஆவார்.
இடம், விஜயநகரம், விஜயபுரி, சோழநாடு, பாண்டிநாடு.

---

## அங்கம் 1. களம் 1.

துங்கபத்திரைநதியின் தென்கரையுள்ளது புராதன விஜயநகரம். அந்நகரரசன் கிருஷ்ணதேவராயனு. அவன் ஆக்ஞை தெக்ஷணமெல்லாம் பரவியது. ஆயினும் நதியின் வடபாலெல்லாம் மகம்மதியர் ஆளுகைக்குட்பட்டது. மேற்றிசையில் கட

29



லோரமாகப் போர்த்துகியர் என்ற ஐரோப்பிய வர்த்தகர்கள் குடியேறி ஓர் சிற்றரசமைத்து வாழ்கின்றனர். இங்ஙனமாக, விஜயபுரியை சுல்தான் இஸ்மேல் அடில்ஷா ஆண்டுவந்தான். இவன் செய்யும் இடுக்கண்களுக்காற்றாது அரசன் கிருஷ்ண தேவன் சபையில் மிகுந்த கவலைகொண்டனனாகி இருந்தனன். அப்போது சபையில் நடந்த மந்திராலோசனை இக்களத்தி லமைந்துளது. இதுநிற்க, சோழன் வீரசேகரன் வஞ்சமாய்ப் பாண்டிநாட்டைக் கவர்ந்து சந்திரசேகரபாண்டியனை முறி யடித்தோட்ட அவன் கிருஷ்ணதேவரிடத்தே சரண் புகுந் தான். கிருஷ்ணதேவன் அபயமளித்துத் தனதுதளகர்த்தன் நா கமனை நோக்கித் தென்னாடு சென்று சோழனைச் சிறைசெய்து பாண்டியற்குப் பதியளித்து வாவென வியம்பினன்.

---

உ

வேலுமயிலும் துணை.

# விசுவநாதம்.

## காப்பு—வெண்பா.

சீலகுணமுடையன் செங்கோலன் றண்ணளியன்
ஞாலம்புகழ் விசுவநாதன் சீர்—பாலனைய
பைந்தமிழி னாடகமாப் பாடத் துணையாக
முந்திவரும் வேழமுகன்.

## முதல் அங்கம்—முதற்களம்.

இடம் - விஜயநகரம், இராஜசபை. காலம் - காலை.

கிருஷ்ணதேவராயர் - சாளுவதிம்மன் - நாகமன் - தென் னாலிராமன் - செவப்பநாயக்கன் - விசுவநாதன் - அச்சுதப்பன் - அரியநாதன் - குருபக்க - மற்றோர்சாது - சபையோர்கள் - கொத்தவால் - முதலானவர்கள், தம்தம் முறையே வீற்றிருக்க.

## நேரிசை—ஆசிரியப்பா.

குருபக்க. வாழ்க வாழ்க மன்னனுஞ் சபையும்!
ஆழ்ந்த கவலையோ டரசன் வீற்றிருத்தற்
கென்ற காரண மியாதோ! வறியேம்.
கிருஷ்ண. ஆன்ற கேள்வி யையனே சரணம்!
அடியன் கவலை யறைதரக் கேண்மின்.
குடியெலா மோம்பிக் குணகட லுடுத்த
வையக மெல்லா மதிக்குடைக் கீழ்வந்
துய்யப் புரந்த துன்னரு ளன்றோ?
இந்நாட் டொருசா ரேழை யிடையன்
பன்னா ளுந்தான் பாங்க ருள்ள
செறிபொழி லலர்ந்த சிற்றூற் றிற்கே
மறிகளை யோட்டி வான்கனை விடுத்துத்
தென்றலங் குழவி தேமலர் படிந்து
மன்றலந் திவலை வாரிச் சிதற
மெய்ப்புள குற்று விழைந்து சாதாரி
கைப்புற் குழலிற் கனிந்து பாடிக்
கவலை யற்றுக் களிப்புட னிருந்தான்.
அவனைப் போற்சுக மடைவ தெவரே?
மாற்றலர் தம்மை மடித்து மன்னுயிர்
போற்றின, னுடையிற் பொதிந்து வைத்த
தீப்போ லோங்குந் தீராப் பகைவன்,
காப்போன் விஜய புரிகா வலவன்,
சுல்தா னிஸ்மேல் சூழ்வினை பலவால்.
கல்லேய் மதிலுங் கணிப்பில் பொறிகளும்
பாதலந் தொட்டுப் படிந்த கிடங்கும்
ஆதர வாக அமைந்தகாட் டரணுஞ்
சேம மாகச் சிறந்தே யிருப்பினும்
யாமப் பகைவனை யடக்குமா றெதுவென்
றெண்ணியே யிருந்தனன்.

நாகம. இராஜ இராஜ!

வெற்றி வேலோய்! வீங்கிருட் பிழம்பை
யெற்றிப் பிளக்கு மிரவி யொப்பத்
துன்னலர்த் தொடைத்துத் துவச மேற்றி
யென்னக ணையுநின் னிணையடிப் படுத்தி
வாகை பூண்டு வான்புகழ் வீரத்
தோகையை மணந்த தோன்றலே! யுன்வலிக்
கின்னவ னிலக்கோ? விலகுநாண் பூட்டும்
வின்னல மறியான், வெய்ய பகழி
யெய்யவு மறியான், இழிதருந் தன்மையன்,
செய்யுஞ் சூழ்ச்சிநிற் செகுத்திட லாகுமோ?
அன்றியு, மிரவி யமைதர வோங்கி
வென்றியம் பதாகை மீதுற வீக்கி
யெந்திரம் பலவுட னிலங்கு மிஞ்சி
மந்தரம் போல வயங்கும் வடபால்.
வேங்கை யிரித்து வேழ மருப்பெறிந்
தோங்கலி னுள்ள வுயர்பொருள் வாரித்
திரையிரு மருங்குஞ் செலுத்துந் துங்கபத்
திரையெனு நதியே திகழ்தர விளங்கும்.
அன்னதி னூழ மார்கலி யொத்தது.
பின்னதி னகலம் பெரும்புறக் கடலே.
செவ்வியிற் பலருஞ் சேர்துறை யற்றது.
கவ்விப் பற்றுங் கராத்தது. மருங்கிற்
செங்குத் தானகற் செறிவுள ததனு
லெங்குத் தானவன் திழிந்தே றுவது?
மன்னுமந் நதியின் வடகுண திசையிற்
றுன்னுபே ரணைக்கண் டுன்னலர் துன்று
வண்ண மிஞ்சி வான்றோய்ந் தளாவி
எண்ணரும் பொறியோ டிலங்கிப் படையொடு
கலைமா னூருங் கன்னிகாப் புடைத்தாய்
மலைநிக ரென்று வழங்கு மாண்புற்

ருனைகுண் டெனும்பெய ரமைந்துள வரணென்
றானகு வேற்கரத் தொருபதி னாயிரர்
கறையடி நிகர்தருங் காளை வீரர்கள்
உறைதரப் பெற்ற துணர்ந்துன் றிருவுளங்
கலங்க லென்னே? காசினி புரக்கும்
விலங்கல் வலியுடை வேந்தர் வேந்தே!

திம்ம. தானை காவல! சாற்றிய துண்மையே.
ஏனைய வலிநமக் கிருப்பினு, மெதிரி
தன்னுடை நிலையுந் தந்திரப் பெருக்கமும்
அன்னதற் குறுதுணை யரச ராற்றலுஞ்
சிந்தனை முற்றும் செய்தபின் னன்றோ
நந்தம் வலியெலா நயக்கற் பாலது?
அன்றியு, மாற்றல ரடங்கின ரேனும்
வென்றியே கருதிமேல் விளைவை யுன்னுவார்.
ஆதலா னம்மிறை யனுதின மவன்செய்
யேதங் களைவா னெண்ணிய செய்கை
சீரிதே. (கடைகாவலன் பிரவேசம்.)

கடைகா. ஜெய!ஜெய! செங்கோல் வேந்தே!
மாரிபோற் பெருகி வழிகண் ணீரினன்,
திருவிழந் தவன்போற் றெளிவிலா முகத்தன்,
உருவ மாறி யுயர்வான் படிந்த
மஞ்சின் மறைந்த மதிபோன் மேனி
யெஞ்சினன், பகழி யேறிய புண்ணின்
றுதிர மாறுபோ லொழுகு மெய்யன்,
எதிர்ப்படு வாரு மிரங்கத் தக்கோன்,
அதிர்தரு குரலா னையகோ வென்றகங்
குழைந்தவ னிருகரங் கூப்பிய தலையன்—

கிருஷ். விழைந்தவ னெவனோ விளம்புதி, திம்ம!

கடைகா. மன்னவ! வைகை வளநா டுடையான்,
பன்னருங் கிளையும் பதியு மிழந்தோன்,
தண்மதிக் குலத்தான், சந்திர சேகரன்,
விண்மதி லோங்கும் வியனகர்க் கடையில்
நின்றன னின்னரு ணினைந்த நெஞ்சனாய்,
மன்றலந் தாரினாய்!